# தமிழ்நாடு அரசு

## உதவி இயக்குநர் அலுவலகம், கைத்தறி மற்றும் துணி நூல் துறை, வேலூர் சரகம், வேலூர் - 7.

## விலைப் புள்ளி அறிவிப்பு

ந.க.எண்:**5479/2002/**பி. நாள்: 28.11.2003.

திருவண்ணாமலை மாவட்டம் 1) ஆரணி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் 2) ஆரணி அன்னை அஞ்சுகம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் 3) களம்பூர் ஸ்ரீராமர் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் 4) கொருக்காத்தூர் அறிஞர் அண்ணா பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகிய சங்கங்களின் நெசவாளர்களுக்கு ராஸ்ட்ரிய சம் விகாஸ் யோஜனா திட்டம் 2003-2004ன் கீழ் நெசவாளர் தறியினை மேம்படுத்துவதற்குண்டான எஸ்.பி.எஸ். கோர்வைக்குண்டான உபகரணங்கள்

1) தள்ளு இயந்திரம்
2) 240 கொக்கி ஜாக்கார்டு பெட்டி மற்றும்
3) தேவையான உபகரணங்கள்

இவைகளை பொருத்துவதற்குண்டான கூலிப்பணி (லேபர் சார்ஜ்) பணிக்கு இத்துறையில் முன் அனுபவமுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரவேற்கப்படுகின்றது. விலைப் புள்ளி படிவம் கீழ்க்கண்ட சங்க அலுவலகத்தில் சங்க அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கிடைக்கப்பெறும்.

| வ. எண் | சங்கத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை ரூபாய் இலட்சத்தில் | முன் வைப்பு தொகை இ.எம்.டி. ரூபாய் | டெண்டர் படிவ கட்டணத் தொகை ரூபாய் | விற்பனை வரி தொகை ரூபாய் | பணிக்குண் டான கால அளவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆரணி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் நெ.2 வேதபுரி ஈஸ்வரன் கோயில் தெரு, கொசப்பாளையம் ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம் | 10.00 | 10000 | 5000 | 400 | 3 மாதங்கள் |
| 2. | ஆரணி அன்னை அஞ்சுகம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் | 5.00 | 5000 | 2000 | 160 | 3 மாதங்கள் |
| 3. | களம்பூர் ஸ்ரீராமர் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் | 2.50 | 2500 | 2000 | 160 | 3 மாதங்கள் |
| 4. | கொருக்காத்தூர் அறிஞர் அண்ணா பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் | 2.50 | 2500 | 2000 | 160 | 3 மாதங்கள் |

விலைப்புள்ளி படிவம் 03.12.2003 முதல் 18.12.2003 வரை மேற்கண்ட சங்க அலுவலகத்தில் அதற்குரிய கட்டணத் தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். விலைப் புள்ளி படிவத்திற்காக செலுத்தப்பட்ட கட்டணத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

பூர்த்தி செய்த விலைப்புள்ளி படிவங்களை மூடி முத்திரையிட்டு இத்திட்டத்தினை (Co-ordinator) முன் நின்று நிறைவேற்றும் "தனி அலுவலா் ஆரணி பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட்., எச்.எச்.106 கதவு இலக்கம் 29 வேதபுரி ஈஸ்வரன் கோயில் தெரு, கொசப்பாளையம் ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்" அவர்களிடம் 18.12.2003 தேதி மாலை 3.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். முன்வைப்பு தொகை (E.M.D. ) கேட்பு காசோலையாக தனி அலுவலா், ஆரணி பட்டு நெசவாளா் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட்., ஆரணி பெயரில் இருக்க வேண்டும்.

பெறப்பட்ட பூர்த்தி செய்த மூடி முத்திரையிட்ட விலைப்புள்ள படிவம், உதவி இயக்குநா், கைத்தறி மற்றும் துணி நூல் துறை, நெ.98ஏ, காட்பாடி மெயின் ரோடு (பால்கன் கேஸ் ஏஜென்சி அருகில்) காட்பாடி, வேலூா்-7 அலுவலகத்தில் உதவி இயக்குநா் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அவா்களால் வரப்பெற்ற நிறுவனங்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

விலைப்புள்ளி படிவம் திறப்பு நாள் உதவி இயக்குநா் கைத்தறி மற்றும் துணிநூல் துறை வேலூா் அவா்களால் பின்னா் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படும்.

பூர்த்தி செய்து மூடி முத்திரையிட்டு பெறப்பட்ட விலைப்புள்ளிகளை ஏற்கவோ அல்லது காரணமின்றி மறுக்கவோ உதவி இயக்குநா் கைத்தறி மற்றும் துணிநூல் துறை வேலூா்-7 முழு உரிமை பெற்றவராவாா். ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்தகாரா்களின் பிணை வைப்புத் தொகை ஒப்பந்தம் முடிவு செய்து பின் திருப்பி அளிக்கப்படும். ஒப்பந்த புள்ளி நாளன்று அரசு விடுமுறை நாள் என எதிா்பாராமல் அறிவிக்கப்பட்டால் அடுத்த அலுவலக நாள் விலைப்புள்ளி படிவம் பெற இறுதி நாளாக கருதப்படும்.

ஒம்/- அ. சுப்பாராஜ், பி.காம்.,
உதவி இயக்குநா்,
கைத்தறி மற்றும் துணிநூல்
நெ. 98ஏ, காட்பாடி மெயின்ரோடு
(பால்கன் கேஸ் ஏஜென்சி அருகில்)
காட்பாடி, வேலூா்-7 வேலூா் மாவட்டம்